[1979 பிப்ரவரி 20

கோவையிலிருந்து விரைவுப் பேருந்துகள்.

* வினா எண். 111—திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவையில் இருந்து கள்ளிக்கோட்டை வழியாக கண்ணனூர் வரை துரித பஸ் விடும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமுலுக்கு வரும்?

திரு ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) :

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு : தலைவர் அவர்களே, கோவையிலிருந்து கள்ளிக்கோட்டைக்கு கண்ணனூர் வழியாக பஸ் விடப்படுமா என்று கேட்டிருந்தேன். கோவை நகரத்திலே கேரள மக்கள் கணிசமாக வசிக்கிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். அமைச்சர் அவர்களின் பேரவைச் செயலர் அவர்களுக்கும் தெரியும். அப்படி இருக்கும்போது இதைக் கணக்கில் எடுத்துக்கொண்டு, கள்ளிக்கோட்டைக்கு, கண்ணனூர் வழியாக பஸ் விடும் ஏற்பாட்டை ஏன் செய்யக் கூடாது? செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவை செயலர்) : தலைவர் அவர்களே, இரு மாநிலங்களுக்கும் இடையே பேருந்து போக்குவரத்து நடத்துவதற்கு இரு மாநில அரசுகளின் ஒப்புதல் தரவேண்டும். இந்த அடிப்படையில் இந்தப் போக்குவரத்து வழித் தடத்தைப் பற்றி இன்னும் அரசு எந்தவிதமான முயற்சியும் எடுத்துக்கொள்ளவில்லை. அதோடு, கோவையிலிருந்து கள்ளிக் கோட்டைக்கு 288 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. இதில் 56 கிலோ மீட்டர் தமிழகத்திலும், 232 கிலோ மீட்டர் கேரளத் திலும் அமைந்திருக்கிறது. இதிலே அரசு ஏற்றுக் கொண்டால், அது லாபகரமாக இருக்குமா என்று யோசித்துக் கொண்டிருக் கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*வினா எண். 112—திரு. ரா. வெங்கிடுசாமி என்கிற வெங்கிடு: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவையில் இருந்து கொச்சி வழியாக திருவனந்த புரத்திற்கு துரித பஸ் விடும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமுலுக்கு வரும்?